# புற்றுநோய் விழிப்புணர்வு புகைப்பட கண்காட்சி

சென்னை, செப். 10-

புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு புகைப்படக் கண்காட்சி, ஓட்டல் ஹில்டனில் நடந்தது.

'இந்தோ பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவ்' அமைப்பின் சார்பில், புற்று நோய் குறித்து இரண்டு நாள் கருத்தரங்கம், சென்னையில் கடந்த 6ம் தேதி நடந்தது.

இதன் தொடர்ச்சியாக, 'புற்றுநோயை முன் கூட்டியே கண்டறிந்தால், சுலபமாக குணப்படுத்தலாம்' என்ற விழிப்புணர்வு புகைப்படக் கண்காட்சி, ஓட்டல் ஹில்டனில் நடந்தது.

இந்தோ பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவ் அமைப்பு, போட்டோ - வாக்கர்ஸ் கம்யூனிட்டி, மியாட் இன்டர்நேஷனல் மற்றும் பிரிட்டிஷ் ஹை கமிஷன் ஆகியவை இணைந்து, இந்த கண்காட்சிக்கு ஏற்பாடு செய்து இருந்தன.

இக்கண்காட்சியை, பிரபல புகைப்படவியல் நிபுணரும், திரைப்பட இயக்குனருமான, ராஜிவ் மேனன் துவக்கி வைத்தார்.

இக் கண் காட் சி யின் வழியாக சேகரிக்கப்படும் நிதியானது, 'மகேஷ் நினைவு அறக்கட்டளை'க்கு வழங்கப்படும் என, பிருத்வி மோகன்தாஸ் தெரிவித்தார்.

மகேஷ் நினைவு அறக்கட்டளை, புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை, மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் பணியிலும், ஏழை நோயாளிகளுக்கு நிதியுதவி வழங்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



'இந்தோ பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவ்' அமைப்பின் சார்பில், 'புற்றுநோயை முன் கூட்டியே கண்டறிந்தால், சுலபமாக குணப்படுத்தலாம்' என்ற விழிப்புணர்வு கண்காட்சியை, திரைப்பட இயக்குனர், ராஜிவ் மேனன் துவக்கி வைத்தார். வலது ஓரத்தில், அமைப்பின் நிறுவனர், டாக்டர் பிருத்வி மோகன்தாஸ். அருகில், பிரிட்டிஷ் துணை கமிஷனர், மைக்நிதாவ் ரியானகிஸ்.